கண்காணிப்புப் பொறியாளர், நீஆது., பவானிவடிநில வட்டம், ஈரோடு—11 அவர்களின்
செயல்முறை நடவடிக்கைகள்

******

பிறப்பிப்பவர் : திரு.ச.காசிலிங்கம், பி.இ.,
கண்காணிப்புப் பொறியாளர், நீஆது.,

செயல்முறை ஆணை எண்.ஆ6/721/ப.வ.மு / 2020, நாள் : 29-06-2020

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டு தொகுதி 4–இல் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர் திருமதி.ப.கலாவதி, இளநிலை உதவியாளர் – இளநிலை உதவியாளர் பதவியில் 13.03.2019 முற்பகல் பணிவரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்குதல் – தொடர்பாக.

பார்வை:
1) முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது, சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ். 3(3) / 25366/2019 நாள்:25-02-2019
2) தலைமைப் பொறியாளர்,நீஆது., கோயம்புத்தூர் மண்டலம், கோவை அவர்களது செயல்முறை ஆணை எண். ஆ1 (2) / 1874 / 2019 நாள்:07-03-2019.
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.ஆ6/464/ 2019நாள்:08-03-2019.
4) தனியரின் விண்ணப்ப நாள்:05-06-2020.

*****

பார்வை எண். 1 மற்றும் 3 வரை உள்ள செயல்முறை ஆணைகளின்படி திருமதி.ப.கலாவதி, 13-03-2019 முற்பகல் அன்று இவ்வட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்றார்.

பார்வை எண்.4–ல் காணும் தனியரின் விண்ணப்ப கடிதத்தின் அடிப்படையில் இவ்வட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.ப.கலாவதி, இளநிலை உதவியாளருக்கு 13-03-2019 முற்பகல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதி 23 (ஏ) –ன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், இவர் 13-03-2019 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் 2 ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவர் தகுதிகாண் பருவ காலத்தில் உரிய துறை தேர்வு மற்றும் பவானிசாகர் குடிமைப் பணி அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பணிவரன்முறை ஆணையானது சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் தொகுதி IV தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

29/6/2020

கண்காணிப்புப் பொறியாளர் சார்பில், நீஆது.,
பவானி வடிநில வட்டம், ஈரோடு –11.

29/6/2020

பெறுநர்

திருமதி.ப.கலாவதி,
இளநிலை உதவியாளர்,
பவானி வடிநில வட்டம்,
ஈரோடு—11.